# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1970/49 - 2016 ජුනි මස 10 වැනි සිකුරාදා - 2016.06.10

*1970/49 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) - பொது

## இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள்

**செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (இ. ச. வா. 423 ஆம் அத்தியாயம்) கீழான அறிவித்தல்கள்**

*செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 7, 10, 11, 15 மற்றும் 30 (5) ஆம் பிரிவுகளின் நியதிகளிலான அனுமதி*

*2002 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 08 ஆந் திகதியிடப்பட்ட 1248/19 ஆம் இலக்க அரச வர்த்தமானி (அதி விசேடம்) மூலமும் 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 1685/2 ஆம் இலக்க அரச வர்த்தமானியின் (அதி விசேடம்) மூலமும் இறுதியாக 2011 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதியிடப்பட்ட 1737/9 ஆம் இலக்க அரச வர்த்தமானி மூலமும் (அதி விசேடம்) திருத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டு ஏப்பிறல் 19 ஆந் திகதியிடப்பட்ட 1232/14 ஆம் இலக்க அரச வர்த்தமானியில் (அதி விசேடம்) பிரசுரிக்கப்பட்ட செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழான அறிவித்தலின் 2 ஆம் பந்தி பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.*

(i) விடயம் (i) இனை, அதாவது திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவத்தனை ஆணைக்குழுச் சட்டத்தின் 19 (அ) பிரிவின் நியதிகளுக்கிணங்க கடன் வசதி வழங்குபவர் என பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றினால், பட்டியலிடப்பட்ட கம்பனியொன்றின் பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்காக முதலீட்டாளர்களுக்குக் கொடுகடன்களை வழங்குகின்ற வியாபாரங்கள் நீங்கலான பணக்கடன் வழங்கலை நீக்குவதன் மூலமும் ;

(ii) விடயம் (v) இனை அதாவது, பிணைய முகாமைத்துவம், மதிப்பீடு மற்றும் தனிப்பட்டவர்கள் அல்லது தனிப்பட்ட நிறுவனங்களுடனான ஆலோசனைகள் உட்பட பிணையப் பணிகளின் ஏற்பாடுகள் என்பதனை நீக்குவதன் மூலமும் ;

(iii) அதன் விடயம் (iii) இனை அடகு தரவுத் தொழில் விடயம் (i) ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும் ;

(iv) விடயம் (iii) ஆகவுள்ள ஒரு மில்லியன் ஐ. அ. டொலருக்கும் குறைவான மூலதனத்தினைக் கொண்ட சில்லறை வியாபாரத்தினை (ii) ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(v) விடயம் ( iv) கரையோர மீன்பிடியினை அவ்விடயம் (iii) ஆக மீள இலக்கமிடுவதன் மூலமும்.

ரி. எம். ஜே. வை. பீ. பர்னாந்து,
செலாவணிக் கட்டுப்பாட்டாளர்.

இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு,
*2016, யூன் 10.*

*6- 928*



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*